**கண்டி கடவத்சதர மற்றும் கங்கவட்ட கோரள பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

---

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, கண்டி கடவத்சதர மற்றும் கங்கவட கோரள பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) 2009 முதல் 2015 ஆம் ஆண்டு வரை வெளியக நிதிஏற்பாட்டினை எதிர்பார்த்து செயற்படுத்தப்பட்டிருந்த 186 நிர்மாண வேலைகளுக்குரிய நிதி ஏற்பாடு ரூபா 4,790,584 தொகை 2016 திசெம்பர் 31 இல் கிடைத்திருந்த போதிலும் தொடர்ந்தும் இப்பணத்தை நிர்மாண கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2014 ஆம் ஆண்டின் போது இரத்துச் செய்யப்பட்டிருந்த ரூபா 9,747,000 மதிப்பிடப்பட்ட பெறுமதியான 37 நிர்மாண வேலைகள் நிர்மாண கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 8 கணக்கு விடயங்களின் மீதிகள் பயன்பாட்டு பட்டோலைகள் மீதியுடன் ஒப்பிட்ட போது ரூபா 1,925,977 தொகையான இணக்கமின்மை கண்டறியப்பட்டது.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

#### (அ) பெற வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு 07 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 130,688,108 ஆக காணப்பட்டது. அவற்றில் 5 வருட காலத்திற்கு மேற்பட்ட கணக்கு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 45,434,270 ஆக காணப்பட்டதுடன், 1 வருடத்திற்கு 5 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குரிய கணக்கு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 55,064,206 ஆக இருந்தது.

#### (ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய 02 கணக்கு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 34,679,806 ஆக காணப்பட்டது. அவற்றில் 5 வருட காலத்திற்கு மேற்பட்ட கணக்கு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 884,413 ஆக காணப்பட்டதுடன், 1 வருடத்திற்கு 5 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குரிய கணக்கு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 19,298,351 ஆக இருந்தது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

03 கணக்கு விடயங்களுக்கு உரித்தான தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாத காரணத்தால் ரூபா 12,522,809 கூட்டுத்தொகையான கொடுக்கல்வாங்கல்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தன.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | 2008 சனவரி 25 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க இலங்கை சனநாயக குடியரசின் அதிவிசேட வர்த்தமானி பத்திரத்தில் வெளியிடப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் 23(அ) பிரிவு | சபை அதிகாரப் பிரதேசத்தில் அரைக்கும் ஆலைகள், பிளொக் கற்கள் கைத்தொழில் மற்றும் சுற்றுலா விடுதி போன்ற 122 இடங்களுக்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ஆ) 2008 பெப்ரவரி 01 ஆந் திகதிய 1534/18 ஆம் இலக்க இலங்கை சனநாயக குடியரசின் அதிவிசேட வர்த்தமானி பத்திரத்தில் வெளியிடப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் 26 ஆம் பிரிவு திருத்தத்தின் பிரகாரம் அதன் 2 ஆவது உப அட்டவணையின் 3.3.1 ஆம் பிரிவு | 2016 ஆம் ஆண்டின் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின் பிரகாரம் சபையினால் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டுமென இனங்காணப்பட்ட 100 கைத்தொழில்களிலிருந்து ரூபா 400,000 சுற்றாடல் அனுமதிப்பத்திர கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| i நி.பி 104(3),104(4) மற்றும் 105(4) | சபைக்குச் சொந்தமான பெக்கோ லோடரின் இடதுபக்க கண்ணாடி உடைந்த விபத்து தொடர்பாக உரிய பரிசோதனை மேற்கொண்டு நட்டத்தை உரிய பொறுப்பு கூற வேண்டிய தரப்பினர் இனங்காணப்பட்டு முறையான நடைமுறைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| ii நி.பி 371(2) | 2007 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் 3 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 10,693 தொகையான முற்பணத்தை 10 வருடங்கள் மற்றும் 8 வருடங்கள் காலம் கடந்திருந்த போதிலும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| iii நி.பி 571(3) | 2013 ஆம் ஆண்டிலிருந்து 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 79 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 1,327,651 ஆன நிறுத்தி வைத்தல் பணத்தை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 54,622,205 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம்

ரூபா 112,105,083 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 57,482,878 ஆன வீழ்ச்சியொன்று காணப்பட்டது.

**2.2 வருமான நிருவாகம்**

-------------------------------------

**2.2.1 வருமானச் சேகரிப்பின் செயலாற்றல்**

------------------------------------------------------------------

வீதவரி, குத்தகை வாடகை, அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் மற்றும் ஏனைய வருமானம் ஆகிய வருமான விடயங்களிலிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 96,754,946 ஆன மீதியொன்று நிலுவையாக காணப்பட்டன.

**2.2.2 வீதவரி**

------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 சனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறு நிலுவை வீத வரி மீதி ரூபா 8,826,748 தொகையாக இருந்ததுடன் 2016 ஆம் ஆண்டில் பட்டியல் இடப்பட்டவை ரூபா 9,570,197 ஆக இருந்தது. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அறவீடுகள் முறையே 3,598,383 மற்றும் ரூபா 7,190,217 ஆக மாத்திரம் இருந்தன. இது 41 சதவீதமாகவும், 75 சதவீதமாகவும் காணப்பட்டன. மீளாய்வாண்டின் இறுதி யில் நிலுவை மீதி ரூபா 7,608,345 ஆக இருந்தது.

(ஆ) 3 அரச நிறுவனங்களின் 90 வீதவரி அலகுகளிலிருந்து 1 ஆண்டு முதல் 11 இற்கு இடைப்பட்டிருந்த காலமாக நிலுவையாக காணப்பட்ட ரூபா 261,564 ஆன வீதவரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வீதவரி அறவீட்டு பதிவேட்டில் வீதவரி உரிமையாளரின் பெயர் குறிப்பாக குறிப்பிடப்படாமல் பன்சல எனக் குறிப்பிடப்பட்டிருந்த 37 அலகுகளிலிருந்து ரூபா 60,113 ஆன வீதவரியும் மற்றும் போவல வலயத்திலும் அம்பிட்டிய வலயத்திலும் இனங்காணப்பட்ட 36 புதிய வீதவரி அலகுகளிலிருந்து ரூபா 21,652 ஆன வீதவரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 5 வருடத்திற்கு ஒரு முறை மதிப்பீடு செய்து வீத வரி அறவிடப்பட வேண்டிய போதிலும் சபையினால் 2006 ஆம் ஆண்டின் பின்னர் புதிய மதிப்பீடு மேற்கொள்ளப்படாமல் பழைய மதிப்பட்டினை அடிப்படையாகக் கொண்டு 2016 ஆம் ஆண்டிற்கு வீத வரி பட்டியலிடப்பட்டிருந்தது.

**2.2.3 ஏனைய வருமானம்**

---------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) அறிவித்தல் பதாகை கட்டணங்கள்**

-----------------------------------------------------------

தென்னக்கும்புற நகரினை அண்மித்து அமைந்துள்ள 5 வியாபார நிலையங்கள் வியாபார பெயரை காட்சிப்படுத்தியிருந்த 1266 சதுர

அடியான 5 விளம்பர பதாகைகளிலிருந்து பெற்றுகொள்ளக்கூடியதாக இருந்த ரூபா 125,400 தொகையை மீளாய்வாண்டிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) கழிவுப் பொருள் வரி**

கழிவுப்பொருள் வரியாக ரூபா 1,500,000 வருமானமொன்று அறவிடுவதற்கு பாதீட்டில் மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அதில் ரூபா 519,000 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

**2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் இருந்தும் ஏனைய அதிகாரிகளிடம் இருந்தும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 797,127 உம் முத்திரைக் கட்டணம் ரூபா 83,466,955 உம் அறவிடப்பட வேண்டியிருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் பாதீட்டில் வீதிகளையும் பாதசாரி கடவைகளையும் திருத்தியமைப்பதற்கும் பராமரிப்பதற்குமாக ரூபா 100,000 நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அந்நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்தி குறித்த சேவைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் பாதீட்டில் பொது சுகாதார நிகழ்ச்சித்திட்டங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 612,000 ஆன நிதிஏற்பாட்டிலிருந்து ரூபா 488,580 நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) பேராதனை நகரில் நடாத்திச்செல்லப்பட்ட வாரச்சந்தை கைவிடப்பட்டிருந்ததுடன் வேறொரு இடத்தில் வாரச்சந்தையொன்றை நடாத்திச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தொழிலாளர் சேவையின் பதவிகளை உடைய 11 ஊழியர்களுக்கு அலுவலக கடமைகளிலும் சாரதி கடமைகளிலும் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(ஆ) 2014 நவம்பர் 12 ஆந் திகதிய 25/2014 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 7 ஆம் பந்தியின் பிரகாரம் அச்சுற்றறிக்கை திகதியின் பின்னர் தற்காலிக, அமைய. சமயாசமய, ஒப்பந்தம் அல்லது சலுகை அடிப்படையில் ஊழியர்களை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன் அங்கீகாரத்தனிப் பெற்றுக்கொண்டதன் பின்னரே சேர்த்துக்கொள்ள முடியுமென குறிப்பிடப்பட்டிருக்கையில் அவ்வாறான அங்கீகாரமொன்று இல்லாமல் அமைய அடிப்படையில் 6 ஊழியர்களைச் சேர்த்து 2016 சனவரி 8 முதல் திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 936,930 சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது.

(இ) சபையில் சேவை புரிந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற 12 உத்தியோகத்தர்களிடமிருந்து 17 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்பட வேண்டிய ரூபா 520,757 ஆன கடன் மீதிகள் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) துண்டுகளாக்கப்பட்ட காணிகளிலிருந்து ரூபா 15,927,736 பெறுமதியான 13 காணிகள் மற்றும் பெறுமதி கணிப்பிடப்படாத 7 காணித் துண்டுகள் பௌதீக ரீதியாக இனங்கண்டு பொது நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அதிகாரச்சட்டத்தின் 21 ஆம் பிரிவின் பிரகாரம் 2012 முதல் 2015 வரையான காலப்பகுதியில் 1027 கட்டிட திட்ட விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் 115 இணக்கச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தன.

### 3.3 விளைவற்ற / குறைப்பயனபாட்டிலான சொத்துக்கள்

-----------------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஈ-நென பியச நிலையத்திற்காக 2015 ஒக்தோபர் 19 ஆந் திகதி ரூபா 450,000 பெறுமதியான 6 கணனிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் போதியளவு இடவசதிகள் இல்லையென் குறிப்பிட்டு 2016 நவம்பர் 28 ஆந் திகதி வரையிலும் அது ஆரம்பிக்கப்படாமல் இருந்ததுடன், அதற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த கணனிகள் ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக இருந்து பயன்படுத்தாமல் விளைவற்ற வகையில் காணப்பட்டன.

(ஆ) ரூபா 340,156 பெறுமதியான புல் வெட்டும் இயந்திரமொன்றும் டேலரொன்றும் 8 இற்கும் 10 இடைப்பட்ட காலமாக விளைவற்றும் குறைவாகவும் பயன்படுத்தப்பட்டுக் காணப்பட்டன.

### 3.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்

------------------------------------------------------

சபை வளவில் அமைந்துள்ள பொது நூலகத்தில் ரூபா 37,220 பெறுமதியான 219 நூலகப் புத்தகங்கள் 1 இற்கும் 4 வருடங்களுக்கும் இடைப்பட்ட

காலமாக இருந்த காணாமல் போயிருந்த போதிலும் அது தொடர்பாகஎவ்வித நடவடிக்கையொன்றும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 ஒப்பந்த நிர்வாகம்

---------------------------------

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சிலிருந்தும் பிரதேச சபையின் ஏற்பாட்டின் அடிப்படையிலும் கழிவுப்பொருட்களை வேறாக்கும் கட்டிடம் அமைந்துள்ள இடத்தில் மீளாய்வாண்டில் பாதுகாப்பு கட்டிடமொன்று நிர்மாணிப்பதற்காக ரூபா 1,782,990 செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 மார்ச் 10 ஆந் திகதிய 2/2016 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளூராட்சி நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் மூலதன நிகழ்ச்சித்திட்டங்களின் நோக்கங்களுக்கும் 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 22 ஆம் பிரிவின் பிரகாரம் துண்டுகளாக்கப்பட்ட பிச்சமல்வத்த காணியின் பொது வசதிகளுக்காக ஒதுக்கப்பட்ட காணிப் பகுதி அந்நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படாமல் கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடத்தின் பாதுகாப்பிற்காக பாதுகாப்பு சுவரொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன், காணியின் உரித்து உறுதி சபைக்கு சொந்தமாக காணப்படவில்லை.

(ஆ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக் கோவையின் 178 ஆம் பிரிவின் (2), (2)(ஊ), (5) மற்றும் (7)(1) ஆம் பந்திகள் மற்றும் 2006 கொள்வனவு வழிகாட்டி கோவையின் 3.2.2, 5.4.8(அ), 6.2.2 மற்றும் 6.3 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் முறையான கேள்வி நடைமுறை பின்பற்றப்படாமல் தனியார் நிறுவனமொன்றுக்கு ரூபா 4,266,610 இற்கு நிர்மாணம் கையளிக்கப்பட்டிருந்தது.

(இ) 2016 திசெம்பர் 28 ஆந் திகதி பரிசோதனை சந்தர்ப்பம் வரையில் நிர்மாணிக்கப்பட்டிருந்த பாதுகாப்பு சுவரின் கொங்கிரீட் கலவை உரிய தரத்தில் இல்லாமல் இருந்ததுடன் கொங்கிரீட் கலவைக்காக தரத்தில் குறைந்த கற்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன.

### 3.6 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

---------------------------------------------------------------------

அம்பிட்டிய, தென்னேகும்புற, பேராதனை, ஹந்தான மற்றும் மஹகந்த வலயங்களிலிருந்து நாளாந்தம் சேரும் 5 தொன் அளவிலான கழிவுப்பொருட்களில் உக்கலடையும் 2 தொன் அளவிலான கழிவுப்பொருட்கள் குண்டசாலை பிரதேச சபையின் கொம்போஸ்ட் உற்பத்தி பிரிவிற்கு கட்டணங்கள் இல்லாமல் கையளிக்கப்பட்டு வருவதுடன் எஞ்சிய 3 தொன் கழிவுப்பொருட்கள் மறையற்ற விதத்தில் வெளியேற்றப்பட்டிருந்தன.

## 3.7 முறையற்ற செயற்பாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1992 பெப்ரவரி 26 ஆந் திகதிய 05/01/119 ஆம் தொகுதியின் ix ஆம் இலகக நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் 1 ஆம் பந்தியின் நியதிகளுக்கு புறம்பாக சபையினால் குழுக்கூட்டங்கள் கடமை நேரத்தினுள் நடாத்தி மீளாய்வாண்டில் ரூபா 279,000 ஆன குழுப் படிகள் கொடுப்பனவு செய்யப்பபட்டிருந்தது.

(ஆ) பிரதேச திஜட்டமிடல் குழுவிற்காக உரிய நாட்களில் சமூகமளிக்காத 4 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 15,000 ஆன குழுப்படிகள் கொடுப்பனவு செய்யப்பபட்டிருந்தது.

(இ) துண்டுகளாக்கப்பட்டு விற்பனை செய்யப்படும் காணிகளில் சமூக களியாட்ட அலுவல்களுக்காக ஒதுக்கப்பட்ட காணி முறையற்ற விதத்தில் வெளித்தரப்பினருக்கு குத்தகைக்கு வழங்கியமை தொடர்பாக கணக்காய்வு ஐயவினாவின் மூலம் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் இக்காணி தொடர்பாக மீண்டும் 2016 நவம்பர் 23 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட நிலையப் பரிசோதனையின் போது ஹந்தான மேற்கு பகுதியின் பிரைம் லேண்ட காணியிலிருந்து சபைக்கு கிடைத்த 11 மற்றும் 12 ஆவது லொட் காணித் துண்டுகளில் அத்துமீறிய நிர்மாணம் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் படி, மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம், உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினத்துடன் ஒப்பிடுகையில் 2 வருமான விடயங்களில் 32 சதவீதம் முதல் 47 சதவீதம் வரையிலும் 5 செலவின விடபங்களில் 20 சதவீதம் முதல் 57 சதவீதம் வரையும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 வருடாந்தக் கொள்வனவுத் திட்டம்

மீளாய்வாண்டில் ரூபா 33,754,661 ஆன மூலதனச் செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 கூட்டிணைந்த திட்டம்

மீளாய்வாண்டினை மேவுகை செய்யும் வகையில் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.4 செயல்நடவடிக்கைத் திட்டம்**

---------------------------------------------

மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.5 உள்ளகக் கணக்காய்வு**

--------------------------------

கணக்காய்வு விசாரணைகளுக்காக பதில் தயாரித்தல் மற்றும் ஒப்படைக்கப்பட்டிருந்த உத்தியோகத்தருக்கு வேறு கடமைகளும் உள்ளகக் கணக்காய்விற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த காரணத்தால் போதுமானதும் சுதந்திரமானதுமான உள்ளகக் கணக்காய்வொன்றை மேற்கொள்ள முடியாதிருந்தது.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

--------------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) ஒப்பந்த நிருவாகம்

(ஆ) வருமான நிர்வாகம்

(இ) சொத்து முகாமைத்துவம்

(ஈ) கடன்பட்டோர் கடன்கொடுத்தோர்